**இரண்டாம் தவணைப்பரீட்சை- 2023**

| தரம் - **10** | **குடியியற் கல்வி** | மூன்றுமணித்தியாலங்கள் |
|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப் பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பகுதி - I

- ❖ **எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.**
- ❖ **மிகவும் பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்து புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

1. ''மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சி முறை சனநாயக ஆட்சி முறையாகும்'' என்ற வரைவிலக்கணத்தை முன்வைத்தவர்
   (1) சீலர் (2) அரிஸ்ரோட்டில் (3) பிளேட்டோ (4) ஆபிரகாம்லிங்கன்

2. நேரடி ஜனநாயகம் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட நாடு
   (1) கிரேக்கம் (2) இத்தாலி
   (3) பிரித்தானியா (4) ஐக்கியஅமெரிக்கா

3. சனநாயக சமூகத்தில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்ளவதற்கு மக்களுக்கு இருக்கவேண்டிய அதிகாரம்
   (1) வாக்குரிமை (2) மீயுயர் அதிகாரம்
   (3) இறைமை (4) அரசியலமைப்பு அதிகாரம்

4. மனிதன் தனது சமூக வாழ்க்கையைப் பூரணப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படுவது
   (1) சமத்துவம் (2) உரிமைகள் (3) சுதந்திரம் (4) உடமைகள்

5. நாடு ஒன்றின் அடிப்படைச் சட்டம்
   (1) கட்டளைச் சட்டம் (2) தேசியசட்டம்
   (3) அரசியல் யாப்பு (4) பொதுச் சட்டம்

6. மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சி முறையை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு
   (1) ஐக்கியஅமெரிக்கா (2) பிரான்ஸ்
   (3) பிரித்தானியா (4) ஜேர்மனி

7. இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்
   (1) வடமாகாணம் (2) கிழக்குமாகாணம்
   (3) வடமத்தியமாகாணம் (4) மேல் மாகாணம்

8. சனநாயக சமூகத்தில் பிரசைகளால் நிறைவேற்றப்படவேண்டிய சட்டரீதியான கடமை
(1) மரபுகளுக்கு மதிப்பளித்தல்
(2) வழங்காறுகளுக்கேற்றநடத்தை
(3) சமயநெறிக்கேற்பச் செயற்படுதல்
(4) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

9. அரசொன்றின் இறைமை அதிகாரம் தங்கியிருப்பது
(1) நிறைவேற்றுத்துறையிடம் (2) பாராளுமன்றத்திடம்
(3) நீதிமன்றத்திடம் (4) பொதுமக்களிடம்

10. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகளைப் பிரிப்பது
(1) உள்ளூராட்சி நிறுவனங்கள்
(2) பாராளுமன்றம்
(3) எல்லைநிர்ணயஆணைக்குழு
(4) கிராமசபைகள்

11. உள்ளூராட்சிமன்றமொன்றின் கொள்கையை உருவாக்கம் செய்யும் அலகு
(1) பிரதிநிதிகள்சபை (2) பொதுச்சபை (3) மேற்சபை (4) கீழ்ச்சபை

12. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி முதலமைச்சர் உட்பட மாகாணசபை ஒன்றின் அமைச்சர்களின் எண்ணிக்கை
(1) 3 பேர் (2) 4 பேர் (3) 5 பேர் (4) 10 பேர்

13. 1926 ஆம் ஆண்டு இலைங்கையில் மலைநாட்டுப் பகுதிக்கு சமஷ்டி ஆட்சி முறை தேவை என்ற கருத்தை முன்வைத்தவர்
(1) S. W. R. D.பண்டாரநாயக்கா
(2) டட்லிசேனநாயக்க
(3) S. J. V.செல்வநாயகம்
(4) ஜே. ஆர். ஜெயவர்த்தனா

14. மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரத்தைப் பிராந்திய அலகுகளுக்கு கையளித்தல் என்பது
(1) அதிகாரத்தைக் கையளித்தலாகும்.
(2) அதிகாரத்தைப் பகிர்தலாகும்.
(3) அதிகாரத்தைப் பரவலாக்குதலாகும்.
(4) அதிகாரத்தை நெறிப்படுத்தலாகும்.

15. 1865 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதல் அமைக்கப்பட்ட மாநகரசபை
(1) கொழும்பு (2) கண்டி (3) காலி (4) யாழ்ப்பாணம்

16. பின்வருவனவற்றுள் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஆட்சிமுறை
(1) சர்வாதிகாரஆட்சி (2) மன்னராட்சி (3) குழுவாட்சிமுறை (4) நல்லாட்சி முறை

17. "ஒரு இனத்துக்கு ஓர் அரசு" என்ற கூற்றுடன் தொடரப்புடைய எண்ணக்கரு
(1) நவீன தேசிய அரசு (2) நல்லாட்சி
(3) சமஷ்டி அரசு (4) ஒற்றையாட்சி அரசு

18. வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திய ஐரோப்பிய நாடு

(1) ஜேர்மனி (2) பிரித்தானியா (3) சுவிட்சர்லாந்து (4) ஸ்பெயின்

19. மாகாணசபையின் பெயரளவு நிர்வாகியாக தொழிற்படுபவர்

(1) ஆளுனர் (2) முதலமைச்சர் (3) அமைச்சர்கள் (4) ஜனாதிபதி

20. ஐக்கிய அமெரிக்காவின் சட்டசபை அழைக்கப்படுவது

(1) பாராளுமன்றம் (2) காங்கிரஸ் (3) தேசியசபை (4) செனட்சபை

21. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி ஐக்கியநாடுகள் சபை வெளியிட்ட பிரகடனம்

(1) மனிதஉரிமைகள் பிரகடனம்

(2) சுற்றுச் சூழல் பிரகடனம்

(3) நிலையான அபிவிருத்தி தொடர்பான பிரகடனம்

(4) போதைவஸ்துத் தடை தொடர்பான பிரகடனம்

22. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் பங்களிப்பு செய்த ஆக்கிரமிப்பு தொடர்பான காரணி

(1) கலிங்கமாகனின் வருகை

(2) விஜயனும் தோழர்களும் வருகைதந்தமை

(3) சங்கமித்தை பிக்குணி குழுவினர் வருகை

(4) பக்தகச்சானாவும் சகோதரக் குழுவினரின் வருகை

23. கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் குழுவாட்சி முறைநிலவிய இந்தியாவின் ஆரியக் குடியேற்றம் எது?

(1) வஜ்ஜி (2) கோசலம் (3) மகதம் (4) வத்சய

24. இருகட்சி ஆட்சிமுறை நிலவும் நாடு

(1) சீனா (2) பிரித்தானியா (3) இந்தியா (4) கியூபா

25. பின்வரும் நாடுகளுள் பன்மைப் பண்பாட்டுச் சமூக அமைப்பைக் கொணடிராத நாடு

(1) இந்தியா (2) ஐக்கியஅமெரிக்கா

(3) நேபாளம் (4) இலங்கை

26. பின்வருவனவற்றுள் பண்பாட்டின் கூறு அல்லாதது

(1) மரபுகள் (2) நம்பிக்கைகள் (3) மொழி (4) முரண்பாடு

27. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் ஒன்றின் சிறப்பான செயற்பாடாக அமைவது

(1) இன மதபேதத்துடன் செயற்படல்

(2) பிறர் கருத்துக்களைச் செவிமடுத்தலும் அவற்றக்கு மதிப்பளித்தலும்

(3) பிறமொழிகளைக் கற்காமை

(4) சமத்துவமின்றிச் செயற்படல்

28. ''தாம் விரும்புகின்ற சமயத்தைப் பின்பற்றுதல்'' என்பதுநல்லாட்சியின் எவ்வகைப் பண்பு?

(1) சமூகப் பண்பாகும் (2) பொரளாதாரம்

(3) அரசியல் (4) பண்பாடு

29. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் வியாபார நோக்கில் வருகைதந்தோர்

(1) அரேபியர், இந்தியர்
(2) அரேபியர்,பிரான்சியர்
(3) இந்தியர்,பிரான்சியர்
(4) சீனர்,ஜேர்மனியர்

30. ஒற்றையாட்சிப் பண்பை பின்பற்றும் நாடு
(1) இந்தியா
(2) அவுஸ்ரேலியா
(3) ஐக்கிய இராச்சியம்
(4) சுவிற்சர்லாந்து

31. சனாதிபதி அரசாங்க முறையின் விசேட பண்பு
(1) உண்மை நிர்வாகம், பெயரளவு நிர்வாகம் என பிரிவு காணப்படும்.
(2) அரசதலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் சனாதிபதி ஆவார்.
(3) சட்டத்துறை மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்.
(4) சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையை பதவிவிலக்க முடியும்.

32. இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
(1) 21 (2) 22 (3) 23 (4) 24

33. சட்டரீதியான கடமைக்கு உதாரணம்
(1) அரசுக்குரிய வரியைச் செலுத்துதல்
(2) பெரியோரை மதித்தல்
(3) சமூகபழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல்
(4) ஏனையோரை மதித்தல்

34. இலங்கையில் சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்திய யாப்புச்சீர்திருத்தம்
(1) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(2) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(3) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்
(4) குறூமக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

35. சுவிற்சர்லாந்து மாநிலஅரசு (கென்ரன்) களின் எண்ணிக்கை
(1) 23 (2) 24 (3) 25 (4) 26

36. இலங்கையில் மாகாண முதலமைச்சரை நியமனம் செய்பவர்
(1) சனாதிபதி (2) பிரதமர் (3) ஆளுநர் (4) சபாநாயகர்

37. அரசின் விருப்பங்களையும் எதிர்பார்ப்பையும் பிரநிதித்துவப்படுத்துவது
(1) ஜனாபதி (2) பிரதமர் (3) சபாநாயகர் (4) அரசாங்கம்

38. உள்ளூராட்சி மன்றங்களின் பிரிவில் உள்ளடங்குவது
(1) நகரசபை,கிராமசபை
(2) பிரதேசசபை,கிராமசபை
(3) நகரசபை,பட்டினசபை
(4) மாநகரசபை,நகரசபை

39. 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 13 ஆம் சீர்திருத்தத்தின்படி மகாண சபைக்குரிய அதிகாரங்கள் காணப்படும் நிரல்

(1) I வது நிரல்
(2) II வது நிரல்
(3) I, II வது நிரல்
(4) I, III வது நிரல்

40. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள நாடு

(1) ஜப்பான்
(2) கிரேக்கம்
(3) பிரான்ஸ்
(4) ஐக்கியஅமெரிக்கா

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம் வினாகட்டாயமானது.**
- **2 தொடக்கம் 7வரையானவினாக்களில் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. (i) ஜனநாயகஆட்சி முறையின் பிரதான பிரிவுகள் இரண்டைத் தருக.
   (ii) கட்சி முறையில் காணக்கூடிய இரண்டு வகைகளைக் குறிப்பிடுக.
   (iii) தேசிய அரசு பலமடைவதற்குக் காரணமான அரசியல் கருத்துக்களை முன்வைத்த சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
   (iv) தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது பயன்படுத்தும் அளவீட்டு நியதிகள் இரண்டைத் தருக.
   (v) தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்க முறைகள் இரண்டையும் தருக.
   (vi) சமஷ்டி அரசாங்கமுறையின் இரு அதிகாரமையங்களையும் தருக.
   (vii) நேரடி ஜனநாயக ஆட்சியில் பங்குகொள்ள அனுமதிக்கப்படாத இரு வகையினரைத் தருக.
   (viii) மாகாணசபையில் ஆளுனருக்குரிய அதிகாரங்கள் இரண்டு தருக.
   (ix) 1865, 1866 ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாநகரசபைகள் இரண்டு
   (x) இலங்கை மக்களால் பேசப்படும் மொழிகள் இரண்டு தருக. ($10 \times 2 = 20$ புள்ளிகள்)

2. "மக்களால் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி மக்களாட்சி" எனப்படும்.
   (i) பண்டைக்காலஆட்சி முறைகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
   (ii) தற்காலத்தில் நேரடி ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படுவதில் காணப்படும் சவால்கள் மூன்று தருக. (03புள்ளிகள்)
   (iii) ஜனநாயக ஆட்சி முறைவெற்றி பெற அவசியமான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)

3. "ஒரு தேசத்துக்கு ஒருஅரசு" எனும் சித்தாந்தமே தேசிய அரச முறையின் அடிப்படைப் பண்பாகும்.

(i) முதலில் தோன்றிய தேசிய அரசுகள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) தேசியஅரசின் தோற்றத்துக்கான காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக. (03புள்ளிகள்)

(iii) தேசியஅரசுகளின் மூலக்கூறுகளைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)

4. "இலங்கையில் இரண்டாம் குடியரசுயாப்பின் 13 ஆம் திருத்தத்துக்கு ஏற்ப மாகாணசபை உருவாக்கப்பட்டது"

(i) அனராதபுர காலத்தில் பண்டுகாபயன் கிராம நிர்வாகத்திற்காக நியமித்த இரு அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மகாணசபை ஒன்றின் முதலமைச்சரின் அதிகாரப் பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03புள்ளிகள்)

(iii) மாகாண சபையின் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள மூன்று பட்டியல்களின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)

5. "ஒரு மத்திய அரசிடம் அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருப்பின் அது ஒற்றையாட்சி எனப்படும்"

(i) ஒற்றையாட்சியின் பண்புகள் பற்றி கருத்து வெளியிட்ட இரு அறிஞர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) ஒற்றையாட்சியின் பொதுவான பண்புகள் மூன்று குறிப்பிடுக. (03புள்ளிகள்)

(iii) அரசாங்கத்தின் மூன்று துறைகளையும் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)

6. "சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்கள் பண்பாடு ஆகும்"

(i) பண்பாட்டின் கூறுகள் இரண்டு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக. (03புள்ளிகள்)

(iii) பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசை ஒருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)

7. "1980 களின் பின்னர் உருவான உரையாடல்களிலிருந்து தோன்றிய எண்ணக்கரு நல்லாட்சி ஆகும்"

(i) நல்லாட்சி தோற்றம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்று குறிப்பிடுக. (03புள்ளிகள்)

(iii) இலங்கையில் பன்மைப் பாட்டுச் சமூகம் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக. (05புள்ளிகள்)